**செய்தி வெளியீடு எண்.410** **நாள். 24.7.2009**

**செய்தி வெளியீடு– 24 .7.2009**

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகளில் 2 கோடியே 21 இலட்சம் ரூபாய்ச் செலவில் 4 ஆயிரம் கூடுதல் இடங்கள்

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

**ஏழை எளிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் அவர்கள் உணவு வசதியுடன் இலவசமாகத் தங்கிப் படித்திட, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் 1200 மாணவ மாணவியர் விடுதிகள் இயங்குகின்றன. அவற்றுள் தற்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் 69 ஆயிரத்து 16 மாணவ மாணவியர் தங்கிப் பயனடைந்து வருகின்றனர்.**

**இந்த விடுதிகளில் மேலும் கூடுதலாகப் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர் சேர்ந்து படித்துப் பயனடைய வேண்டும் என்பதற்காக, 2 கோடியே 21 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய்ச் செலவில் பள்ளி மாணவ மாணவியர் விடுதிகளில் 2400 கூடுதல் இடங்களும், கல்லூரி மாணவ மாணவியர்க்கான விடுதிகளில் 1600 கூடுதல் இடங்களும் ஆக மொத்தம் 4000 இடங்களைப் புதிதாக ஏற்படுத்தி முதலமைச்சர் கலைஞர் இன்று (24.7.2009) ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9